மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை
அசல் வழக்கு எண். 99/2023

**2025–ம் ஆண்டு மார்ச் மாதம் 25–ம் நாள் வெள்ளிக் கிழமை** வாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) **திருமதி. P.தேன்மொழி, உதவியாளர்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :வெண்ணிலா | தொழில் | : விவசாயம் |
| கணவர் பெயர் | :ராமலிங்கம் | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | :ரோஸ் நகர், பெரம்பலூர் | வயது | : 36/2025 |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

(i) தாவா சொத்திற்கு ஆவணங்கள் என் பெயரில் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரிதான். என் கணவர் பெயரில் உள்ளது. எனது கணவர் கிரையம் பெறுவதற்கு முன்பு தாவா சொத்தின் மீது ஐந்து நபர்கள் கடனுக்காக கிரையம் பெற்றார்கள் என்றால் சரியல்ல. எனது கணவரும், மேற்படி ஐந்து நபர்களும் சுத்தம் கிரையம் தான் பெற்றார்கள். எனது கணவரின் கிரைய முன்னவர்கள் கிரையம் பெற்றதற்கான மூலப்பத்திரம் எங்கள் வசம் உள்ளதா என்றால் அதுபற்றி எனது கணவருக்கு தான் தெரியும். கிரையம் முன்னவர்கள் கிரையம் பெற்றதற்கான மூலப்பத்திரம் பிரதிவாதிகளின் வசம் உள்ளது என்றால் சரியல்ல. எனது கணவர் வசம் உள்ளதாக எனது கணவர் என்னிடம் சொல்லியுள்ளார். மூலப்பத்திரத்தை தாக்கல் செய்ய முடியுமா என்றால் அதுகுறித்து எனது கணவர் தான் சொல்லமுடியும். எனது சித்தப்பா பெயர் என்ன என்றால் எனக்கு சித்தப்பா கிடையாது. தங்கமணி என்பவர் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது சின்னம்மாவின் மருமகன் ஆவார். முத்துசாமி எனது உடன் பிறந்த தம்பி ஆவார்.

(ii) 1ம் பிரதிவாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து என்னை அலைய வைப்பதாக வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விசாரணை செய்த போது எனக்கு ஆதரவாக மேற்படி தங்கமணி, முத்துசாமி எனக்கு சாட்சியாக கையொப்பம் செய்தார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோராமல் தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரியுள்ளதால் வழக்கு சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. தாவா சொத்தைப் பொறுத்து கடனுக்காக தான் கிரையம் ஏற்பட்டது என்றாலும் அதை பொறுத்து ரூ.30 லட்சத்திற்கு எங்களுக்குள் பேச்சுவார்த்தை ஏற்பட்டு ஒத்துவரவில்லை என்பதால் இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளோம் என்றால்

சரியல்ல. கடனுக்கா கிரையம் ஏற்பட்டதால் தான் ஆவணங்களின் படி நான் தாவா சொத்தின் மீது பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் கடனுக்காக கிரையம் ஏற்படவில்லை. வழக்கை தாக்கல் செய்ய எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல.

Iii) தாவா சொத்தை நாங்கள் அனுபவம் செய்யவில்லை என்றாலும் பிரதிவாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல. எனது கிரையம் முன்னவர்களை சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், தாவா சொத்தின் மீது எனக்கு எந்த உரிமையும், அனுபவமும் இல்லை என்றாலும், கடனுக்காக தான் ஐந்து நபர்களின் மீது கிரையம் ஏற்பட்டது என்றாலும், நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை.